உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபி௵ ஆடி௴ | மணி ரு.

வணக்கம்.

முருகக்கடவுள்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

—நக்கீரதேவர்.

சிவபெருமான்.

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
 பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
 உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
 செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
 எங்கெழுந் தருளுவ தினியே.

—மாணிக்கவாசகர்.

திருநாவுக்கரசர்.

இடையறாப் பேரன்பும் மழைவாரு மிணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடற்
றொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகுந் துதித்துவாழ்வாம்.

—சிவஞான யோகிகள்.

குமரன்.

நமது நாட்டிற் கிறிஸ்தவரின் முயற்சி.

கிறிஸ்தவ சமயமானது உலகின் எல்லாப்பாகங்களிலும் பரவியிருக்கின்றது. இதுபோழ்து கிறிஸ்தவ சமயிகள் இல்லாத நாடொன்று கிடையாது. அப்படியே நமது நாட்டிலும் ஏராளமான மக்கள் கிறிஸ்தவ சமயத்திற் சேர்ந்திருக்கின்றனர். உலகத்திலுள்ள பல்வேறு சமயிகளும் சிறிது சிறிதாகக் கிறிஸ்தவ சமயத்திற் சேர்ந்துகொண்டே வருகின்றனர். கிறிஸ்தவர்கள் கோடிக்கணக்காகப் பொருளைச் செலவிட்டுத் தேசங்கடோறுஞ் சென்று பலமான பிரசாரஞ்செய்து தங்கள் சமயத்தை ஏனைய பலரும் ஆதரிக்கவும் அபிமானிக்கவும் தக்கவாறு தளராத முபற்சிசெய்து வருகின்றனர். இதுகாலை உலகத்தில் கிறிஸ்தவ சமயத்தினரே தொகையில் அதிகப்பட்டிருக்கின்றனர். ஆனால் கிறிஸ்து சமயம் பிறந்து ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருஷங்கள்தாம் ஆகின்றன. நிற்க,

நமது தெய்வப் பாரத நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஹிந்துக்களும் பிறரும் கிறிஸ்தவரானதற்குக் காரணமென்னை? கிறிஸ்தவ வேதத்தைக்கற்று உண்மைபறிந்ததா? அல்லது ஹிந்து மதத்தில் உண்மையொன்று மில்லையென்று தெரிந்துகொண்டதா? இல்லை! இல்லை!! இதுபோழ்து நமது சமயத்தினின்றுங் கிறிஸ்தவம் புகுந்தவரியாவரும் தஞ் சமய நூல்களை ஐயந் திரிபறக் கற்று அவற்றில் சாரமில்லையென்று கண்டவர்களல்லர். கிறிஸ்தவ சமயப்பிரசாரகர்களாலும், கிறிஸ்தவமக்களாலும் கிடைத்த இகபோக சுகங்களைக் கருதியே கிறிஸ்தவராயினரென்பது மிகையாகாது. உலகிலுள்ள மக்கள் முதன் முதலில் வயிற்றுப்பசியை நீக்கவே

வழிபார்க்கின்றனர். பசி யிருந்தால் மனிதனுக்கு வேண்டிய முக்கிய லக்ஷணங்கள்கூடப் பறந்துபோய் விடுகின்றன. "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந்தவம் முயற்சி தாளாண்மை, தேனின் கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசி வந்திடப்பறந்துபோம்" என்று ஔவைப்பிராட்டியார் கூறியுள்ளார். இரவு பகலாகப் பசியினால்மெலிந்து எப்படிஉயிரை உடலில் நிறுத்துவதென்று எண்ணியேக்கம்பிடித்துக் கிடக்கும் ஜனங்களிடையில் வாய்ப் பேச்சுமட்டுமாக நிற்கும் பிரசாரங்கள் பயனளிக்க மாட்டா. நமது நாட்டிலுள்ள ஏழைமக்கள் பசி ஒன்றின் பொருட்டே மனவலியையும் தேகசக்தியையும் செலவிட்டு வருந்திவருந்தி காலைமுதல் மாலைவரை யுழைத்து ஈட்டும் சொற்பப் பணத்தைக் கொண்டு கால்வயிற்றுக்கஞ்சியைக்குடித்து நோயொருபுறம் வாட்ட உயிர்தாங்கி நிற்கும் இந்நாளில், சமயப் பிரசாரத்தை எப்படிச்செய்தல் வேண்டும்? நமது நாட்டில், பாலில்லாத காரணத்தால் குழவி தாய்முகம்நோக்க மனைவிகணவன் முகநோக்கத் தான் யார்முகம் நோக்குவதென விளங்காது வருந்தித்தனது கடைசிநாளை எதிர்நோக்கி ஒவ்வொருநிமிஷமும் துக்கக்கடலிற்கிடந்து தவிக்கும், படிப்பற்ற ஒரு குடும்பத் தலைவன் தமது சொந்த மதத்தினராலேயே புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும்போது எவ்விதமான சமயப் பிரசாரம் தேவையென்பதை யேசுகிறிஸ்துவின் அடியார்களின் பரம்பரையார் நன்கு தெரிந்துகொண்டனர்.

இந்த நாட்டில் கிறிஸ்தவ சமயம் பரவுதற்குச் செய்யவேண்டியவைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து வேலைசெய்யத் தொடங்கினர். பலவகைப்பட்ட சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஏராளமான பொருளையுங் கொண்டுவந்து நூற்றுக்கணக்காகப் பள்ளிக்கூடங்களையும் வைத்தியசாலைகளையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தினர். கோடானு கோடியாகத் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர். பைபில் முதலிய நூல்களை நமது தேசபாஷைகளில் அச்சிட்டு லக்ஷ லக்ஷமாக விலையின்றிக் கொடுத்தனர். தங்கள் மதத்தைப் பற்றுகிறவரையில் வேண்டிய—சாதாரணமான

சுவதந்திரம் சமத்துவம் கொடுத்தனர். கொடுக்கின்றனர். அவர்களது கலாசாலைகளில் ஆயிரமாயிரம் பிள்ளைகள் கல்விகற்று வெளியேறி யிருக்கின்றனர். அதில் தாழ்ந்த வகுப்பார் என்று கூறப்படுபவர்களே யன்றி உயர்ந்த வகுப்பாரும் பயில்கின்றனர். மேற்கூறிப்போந்த பள்ளிக்கூடங்களில் பைபில் கட்டாய பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை நன்கு பயில்வார்க்குப் பரிசளிக்கப் பெறுகின்றது. அவர்களது வைத்தியசாலைகளில் கணக்கற்ற ஏழை ஹிந்துக்கள் வைத்யம் செய்துகொள்கின்றனர். அவர்களது தொழிற்சாலைகளில் தொழில்செய்து பிழைப்பவர் அநேகர். ராஜாங்க பாஷை ஆங்கிலமாகவே, ஆங்கிலங்கற்றார்க்கே உத்யோகம் முதலிய அதிகாரதோரணையும் பொருள்வருவாயுமுண்டானபடியால் ஆங்கிலக்கலாசாலைகளை ஏற்படுத்தி அப்பாஷையில் ஜனங்களைக் கவர கிறிஸ்தவர்கள் முயன்றார்கள். அப்படியே பெரும்பொருள் செலவிட்டு உயர்தரக் கலாசாலைகளையும் மத்யதரக் கலாசாலைகளையும் கீழ்த்தரக் கலாசாலைகளையும் நடத்திக்குழந்தைகளை பால்யத்திலிருந்தே தம்வழியில் திருப்பமுயன்றனர். படிப்பு முடிந்தபின்னர் அவர்கள் கிறிஸ்தவர்களாக விருந்தால் உத்தியோகங்களையும் சம்பாதித்துக் கொடுத்தனர். தாய்தந்தையரால் பராமரிக்க முடியாத குழந்தைகளையும், தாய்தந்தையரை யிழந்த மக்களையும் தங்கள் பராமரிப்பில் வைத்துப்பாதுகாத்தனர். அப்படிப்பட்ட பெண்குழந்தைகளை நன்கு பயில்வித்துப் பலருக்கு விவாகஞ்செய்து கொடுத்தும் வருகின்றனர். இப்படியாக உலகபோகங்களில் எதுதேவையோ அவைகளைக்கொண்டே ஜனங்களைக் கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்திற் சேர்த்து வருகின்றனர். சென்ற சில வருஷங்களில் கிறிஸ்தவர்கள் இந்தியாவிற் செய்துவந்த இத்தாதி முயற்சிகளால் இதுகாலை ஏழுகோடிக்கதிகமான ஜனங்கள் கிறிஸ்தவர்களாகி இருக்கின்றனர். அவர்களது பெரும் முயற்சியால் லக்ஷக்கணக்கான பிள்ளைகள் கல்விகற்பிக்கப் பெற்றிருக்கின்றனர். கீழ்க்குலத்தார் என்று ஹிந்துக்களால் ஒதுக்கப்பெற்றபலரை அந்த மக்களே மேற்குலத்தாரென்று கருதி சமத்துவம் பாராட்டும்படி நல்ல நிலைமைக்கு உயர்த்தியிருக்கின்றனர். இப்போதும் கிறிஸ்தவ

சமயப்பிரசாரம் தீவிரமாகவே நடைபெறுகின்றது. இன்னும் பலமான முயற்சிகளைச்செய்வதற்கு ஏற்பாடும் செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களுடைய ஸ்தாபனங்களின்செலவுமுதலியவற்றை அந்தந்த ஸ்தாபனங்களின் வரும்படியைக்கொண்டே ஈடு செய்துவிடுவதுமல்லாமல் அவற்றினின்றும் அதிகமான லாபத்தையும் அடைந்து வருகின்றனர். ஆகவே அவர்களது சமய வளர்ச்சிக்கான முயற்சிகள் இந்தியாவிலும் வேரூன்றித் தழைகின்றது. நமது சமயவளர்ச்சிக்கு என்னென்ன முயற்சிகள் செய்யப்பெறுகின்றன?

கீதையே பாதை.

(ஸ்ரீ சுப்பிரமணிய சிவா அவர்கள் எழுதியது.)

உலகு தோன்றிய நாள் தொட்டு ஜீவராசிகள் சர்வபந்தங்களினின்றும் நிவிர்த்தி யடைந்து மோக்ஷமெய்தி—வீடு பெற்று—பேரின்பத்தை, என்றுமழியாத, எல்லையில்லாத, இணையற்ற ஆநந்தத்தைப் பெற்று நித்தியவாழ்க்கை வாழுமாறு எத்தனையோ வழிகளைப் போதித்திருக்கின்றனர்; எத்தனையோ ஆசார்யர்கள் எத்தனையோ முறைகளை யுபதேசித்திருக்கிறார்கள். ஆயினும் அவையெல்லாம் ஒவ்வொரு காலத்து, ஒவ்வொரு இடத்து, ஒவ்வொரு பக்குவ நிலையிலுள்ளவர்க்கே பயன்படுவனவா யிருக்கின்றன: பெரும்பான்மைச் சாத்திரங்களும் வீடு பெறுவதற்கு நிவிர்த்தி மார்க்கத்தையே பெரிதெனப் பாராட்டுவனவா யிருக்கின்றன. உலகம் துக்கமயமானது; இன்பமயமான பொருள் வேறொன்றுள்ளது; என்று இரண்டுபடப்பேசும் சாத்திரங்களே பெரும்பாலனவாம். ஆனால் ஹிந்துமதத்துக்கு அஸ்திவாரமாயுள்ள பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றாகிய பகவத் கீதையோ இவ்வுலகத்தில் இப்பொழுதே, இந்த ஜீவிதத்திலேயே என்றும் சாச்வதமாயுள்ள இன்பத்தை யடைந்தநுபவிக்கலாம் என்று கோஷிக்கின்றது.

மற்ற சாஸ்திரங்களெல்லாம் ஒவ்வொரு பக்ஷத்தவர்க்கே உபகாரமான பாதைகளாயிருக்கின்றன. இதையோ ஜனனமரணச் சுழலில் பட்டு, சலனபுத்தியடைந்து தவிக்கின்ற சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் வேற்றுமைப் புத்தியை யொழித்து விடுதலை யளிக்கும் விசாலமான பாதையாயிருக்கின்றது.

மனிதன், அவன் எந்தத்தொழிலில் இருந்தாலும், கர்மம் செய்யாமலிருக்க முடியாது. பிரஹ்மவஸ்துவோடொன்றுபட்டு பேதாபேதமற்று, பிரக்ஞா சொரூபமாய்விளங்குகின்ற பெரியோர்களைத்தவிர, மற்றவர் எல்லோரும் கர்மம் செய்துகொண்டுதான் இருக்கவேண்டியிருக்கிறது. "மானத விகற்பமற" நிர்விகற்ப சமாதியில் இருப்பவர்களுக்கே கர்மம் செய்யாமலிருத்தல் முடியும். கர்மம் செய்துகொண்டிருக்கும் வரையில் மனம் சலித்துக்கொண்டுதான் இருக்கும்; மனத்தின் சலனமே துக்கத்துக்குக் காரணமாம். ஆகையால் துக்கம் ஒழியவேண்டுமாயின், மனத்தின் சலனம் நிற்கவேண்டும்; அப்பொழுது கர்மம் செய்தற்குக் காரணம் ஏற்படாது. கர்மம் நின்றுபோகும். ஆனால் கர்மமொன்றும் செய்யாமல் ஒரு விநாடியேனும் ஒருவராலும் இருக்க முடியாது. பின்னர்தான் என்செய்வது? இற்றைக்குச் சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்குமுன் நமது தாய்நாட்டிலே பூர்ணாவதார புருஷராய் விளங்கின ஸ்ரீ கிருஷ்ணன், அர்ஜுனன் மூலமாக உலகத்தாருக்கு மிகவும் சுலபமான, ஆனால் மிகவும் சூட்சுமமான. ஒரு பாதையைக் காண்பித்திருக்கிறார். நீ துக்கம் அனுபவிக்கிறாய் என்பதும் உனக்கு துக்கநிவிர்த்தி யுண்டாகவேண்டுமென்பதும் உண்மைதான்; ஆனால் அதற்காக நீ உலக வாழ்க்கையை விட்டு விட்டு எங்கும் ஓடவேண்டாம்; பிராணாயாமாதி பிரயாசைகளெல்லாம் எடுக்கவேண்டாம்; மனிதருடைய சாதாரண, தினசரி வாழ்க்கையினின்றும் நீ எவ்விதத்திலும் மாறுபட்டு நடக்கவேண்டாம்; நீ பூபாரம் தாங்கும் அரசனாயிருக்கலாம்; போட்டிபோட்டு வியாபாரம் செய்து பொழுதெல்லாம் கவலைப்பட்டுப் பணம் சம்பாதிக்கும் வியாபாரியாயிருக்கலாம். நீ எந்தத்தொழிலிலே, எந்த ஆச்ரமத்திலே, எவ்வித வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த பொழுதி

லும், ஆநந்தமடையலாம். பலன்கருதாது கர்மங்களைச்செய்து வருவாயானால், பயனிலே மனம் செல்லாது கர்மங்களைச் செய்து வருவாயானால், என்றுமே ஆநந்தத்திலிருப்பாய். ரகஸ்யம் இதுதான்; பலன் என்னவானாலும் ஆகட்டும், பிரகிருதி ஸ்வபாவத்தை யநுசரித்துக் கர்மங்கள் நடைபெறுகின்றன. நீ ஒரு தெருவினூடே போய்க்கொண்டிருந்தால், அந்தத் தெருவிலே இரு பக்கத்திலே எத்தனையோ கார்யங்கள் நடைபெறுகின்றன. அவற்றை யெல்லாம் உனது கண்கள் பார்க்கின்றன; ஆயினும் அவற்றினிடத்து உனது மனம் பற்றுகின்றதில்லை. அதுபோலவே, நீ எல்லாக் கர்மங்களையும் செய்வாய். மனத்தை மாத்திரம் பற்றவிடாதே. மனமானது எப்பொழுதும் நிச்சலனமாய், நிர்விகாரமாயிருக்கட்டும்.

இந்த திரமானஉபதேசமானது ஸ்ரீகிருஷ்ணனால் அர்ஜுனனுக்கு யுத்த களத்திலே, ரத்த வெறிகொண்டு ஒருவரையொருவர் கொல்லவேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறு எண்ணமிலாதவர்களாகிக் கூடியிருந்த சமயத்தில், சங்க நாதங்களும் ஜய பேரிகைகளும் திக்குகளெல்லாம் செவிடுபட முழங்கிக்கொண்டிருந்த சமயத்தில், போதிக்கப்பட்டது. உபதேசிக்கும் பொழுதே பிரத்தியட்ச நிரூபணம் செய்து காண்பிப்பதற்கு இத்தகைய இடத்தையும் காலத்தையும் தவிர, வேறு எந்த இடமும் காலமும் உசிதமாயிராது. ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரம் முழுதும் அவருடைய உபதேசத்தின் பிரத்தியட்சப் பிரமாணமாயிருக்கிறது.

ஆத்மா அகண்ட ஸ்வரூபம் வாய்ந்தது; அதற்கு அழிவில்லை. அப்படியிருக்க, கொல்லுவது யார்? கொல்லப்படுவது யார்? சரீரமோ ஜடம்; ஜடம் அழியுந்தன்மையுள்ளது; என்றேனும் அழிந்து போகத்தான் செய்யும். ஆகவே அதைப்பற்றி விசாரமேன்? என்று ஆத்மஞானோபதேசம் செய்ய ஆரம்பித்து, கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று வழிகளிலும் அர்ஜுனனையிட்டுச்சென்று அவனுடைய மனத்தைநிலைப்படுத்தி, தர்மஸ்தாபனம்செய்வதற்குக் கொடுங் கோலர்களாயிருந்த கௌரவர்களை அவனைக் கொண்டு கொல்லுவித்தார்.

கீதையுபதேசிக்கப்பட்ட இடமானது குருக்ஷேத்திர பூமியாகும். இந்தப் பூமி தர்மக்ஷேத்திரமென்று சொல்லப் பட்டிருக்கிறது. இவ்விடத்திலே பிராஹ்மணனாகிய பரசுராமர் தமது தாயாருடைய பதிவிரதா சக்தி தடுமாறும்படி கார்த்திகேயார்ச்சுனன் என்னும் அரசன் மமதையுடனே சஞ்சாரம் செய்தானென்ற கோபத்தினால் க்ஷத்திரியர்களை இருபத்தொரு தலைமுறை கொலை புரிந்து, அவர்களுடைய இரத்தத்தையெல்லாம் குரு க்ஷேத்திர பூமியிலே ஒரு குளம் வெட்டி அதிலே கொட்டி, அந்த ரத்தத்தினால் பிதுர் தர்ப்பணம் செய்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுடைய சூக்ஷுமார்த்தம் யாதெனில், க்ஷத்திரியனுடைய சரீர பலத்தை—தேக சக்தியை—பிராஹ்மணனுடைய பிரஹ்ம பலம் ஆத்ம சக்தி—ஜயித்தது என்பதாம். பிரஹ்ம பலத்தின் ஜயத்துக்கு இருப்பிடமான குருக்ஷேத்திர பூமியிலேயல்லாமல் வேறே எந்த இடத்தில் கீதையின் உபதேசம் பலனடையும்!

இந்த கீதையை ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தாராயினும், அவ்வர்ஜுனனால் அது உலகுக்கு ஒரு சிறிதும் பயன்படவில்லை. ஆனால் அதையொளிந்து கேட்டுக்கொண்டிருந்த சஞ்சயன் என்பான் திருதராஷ்டிரனிடத்தில் கூறவே, அது உலகுக்குபகாரமாயிற்று.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய ஸ்வதர்மமே பெரிது. ஸ்வதர்மத்தை ரக்ஷிப்பதன் நிமித்தம், எதிர்த்து நிற்பவர் யாவரேயாயினும் அவருடைய பாந்தவ்யத்தையோ, நட்பையோ லக்ஷியம் செய்யாது, அவரைத் தட்டியெறிந்து செல்லவேண்டும். போலி நியாயங்கள் பேசுவதில் பயனில்லை. மனத்தைச் சுத்தமாக்கி, திடமாக்கி, ஒருமுகப்படுத்தி, அசைவில்லாது ஆசையில்லாது செய்து கொண்டு, எக்கர்மங்களையும் செய்யலாம். இன்பம் இங்கேயேயுள்ளது; எடுக்கும் வழியில் அதையெடுத்து அனுபவியுங்கள் என்று பறையறைகின்றது கீதை. ஆகையால் எல்லோருக்கும் ஏற்ற பாதை கீதைபேதான்.

கரும்பு.

ஸ்ரீமாந். அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் எழுதியது.

கரும்பு மங்கலப் பொருள்களுள் ஒன்று. இனிப்பைத் தரும் பொருள்களில் முதன்மையாயது. மன்மதனது வில். மக்கள் எல்லோரும் கரும்பைப் பெரிதும் விரும்புகின்றார்கள். இக் கரும்பு, தின்ற ஒரு சில விநாடிகளுக்கே நாவிற்குமட்டும் இன்பந் தருவது. இது அழியுந்தகையது. ஆதலால் இதில் உள்ள சிறு இன்பமும் இமைப்பொழுதில் அழிவது. பிறப்பு இறப்பு எனும் சுழியுள் அகப்பட்டு, இது அழிவதாதலால் ஊனக்கரும்பு ஆகும். பிறப்பு இறப்பு அற்றதாய், என்றும் அழிவில்லாததாய் எஞ்ஞான்றும் இன்பமயமாய் மிளிரும் பொருளில் உள்ள இன்பமேபேரின்பம். அதுவே அழியாச்செல்வம். அத்தகைய அழியாச் செல்வத்தை அளிப்பவர் கடவுள் ஒருவரேயாவர். கடவுள் இன்ப வடிவாய் இன்பவூற்றாய் இருத்தல்பற்றி, அவரைச்சமயாச்சாரியர்களும் நூலாசிரியர்களும் ஏனைய உலகத்துமக்களும், "இன்பமே! இன்பமே!" என்று துதிக்கின்றார்கள். அவ்வின்பத்தை நேரே கண்கூடாக அநுபவிக்கும்பொருட்டும் பிறருக்கு எடுத்துக்காட்டும் பொருட்டும், "கரும்பே! தேனே! பாலே! கற்கண்டே! கனியே!" என இவ்வுலகில் இனிப்பைத் தருகின்ற பொருள்களாற் பரவுகின்றார்கள். இதற்குச் சான்றுகள் பலவுள. "கரும்பினுமினியான் றன்னைக் காய்கதிர்ச் சோதியானை; திருமணியைத் தித்திக்குந் தேனைப்பாலைத் தீங்கரும்பின் இன்சுவையை" என்று நமது அப்பர் சுவாமிகளும், "என்பிறவி வேரறுக்குங் கரும்பினை; திருமணியைத் தீங்கரும்பினூறலிருந்தேனை" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "தேனே! யமுதே! கரும்பின் றெளிவே! சிவனே! தென்றில்லைக் கோனே!; ஞானக்கரும்பின் றெளியைப் பாகை நாடற்கரியநலத்தை நந்தாத் தேனைப்பழச் சுவையாயினானைச் சித்தம்புகுந்து தித்திக்க

வல்ல, கோனைப்பிறப்பறுத் தாண்டுகொண்ட கூத்தனை........" என்று மாணிக்கவாசக சுவாமிகளும், "அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே! ஆரமிர்தே!" என்று தாயுமானாரும், "கையாத தீங்கனியே! கயக்காதவமுதே! கரையாத கற்கண்டே புரையாதகரும்பே!" என்று இராமலிங்கசுவாமிகளும் கூறியிருத்தல் காண்க. "அத்தகைய அழிவில்லாத இன்பத்தை அளிக்கும் ஞானக்கரும்பு ஒன்று தில்லையில் திகழுகின்றது. அது அணிப் பொன்னம்பலத்திலே, தன்னை ஆட்டுவிப்பார் ஒருவர் இன்றித் தானாக ஆனந்தமயமாய் ஆடிக்கொண்டிருக்கின்றது. அதில் ஆனந்தத்தேன் பொங்கித் ததும்புகின்றது. அதற்கு மூன்று கண்கள் உள்ளன. நெடுநாளாக அதனைப்பொருந்திப் பெரிதும் விரும்பி, ஒரு மால்யானையைப் (விநாயகக் கடவுளை) பெற்ற பெண்யானை யொன்று உண்டுகொண்டிருக்கின்றது" என்று நமது குமரகுருபர சுவாமிகள் கூறுகின்றார்கள். அப்பாடல் வருமாறு:—

ஆட்டுவின்றோ ரின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று—வேட்டதனை
உற்றுநெடு நாளாக உண்ணுமோர் மால்யானை
பெற்றதொரு கூந்தற் பிடி.

இப்பொழுது நமக்கு இரண்டு கரும்புகள் கிடைத்திருக்கின்றன. ஒன்று ஞானக்கரும்பு. மற்றொன்று வனக்கரும்பு. முன்னையது தில்லையில் திகழ்வது; எல்லையில் சுவையுடையது. பின்னையது கொல்லையில் வளருவது; குறுகியசுவையுடையது. தில்லைக் கரும்பு இல்லையெனாது எஞ்ஞான்றும் எல்லாப் புலன்களுக்கும் இன்பந்தருவது; விலையிலாது யாவராலும் கொள்ளைகொண்டு உண்ணத்தக்கதாய்ப் பொதுவில் சிதாகாசத்திலே விளங்குவது. கொல்லைக்கரும்பு குறுகிய அளவுடைய சிறு இன்பத்தை ஒரு புலனுக்கு மட்டும் சிறிதுபோழ்து தருவது; நான்குபக்கங்களிலும் வேலியிடப்பெற்று ஒருவர் காவலில் உளதாய், ஒரு அணா இரண்டு அணா விலையுடையது. தில்லைக்கரும்பு சோதிமணிமுடியுடையது. கொல்லைக் கரும்பு இலைமுடியுடையது. தில்லைக்கரும்பின் அடி முடி இரண்டும் இனிக்கும்; மொழிக்குமொழி தித்திக்

கும். கொல்லைக்கரும்பின் அடிதான் இனிக்கும்; முடி இனிக்காது. தில்லைக்கரும்பின் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறு மிளிரும். கொல்லைக் கரும்பில் வெண்நுரை படிந்திருக்கும். தில்லைக்கரும்பில் இடையறா வின்பம் எனும் முத்து உளது. கொல்லைக்கரும்பில் நவரத்தினங்களில் ஒன்றாகிய முத்து விளைவதுமுண்டு. கொல்லைக்கரும்பிலுள்ள இனிப்பை அநுபவிக்க வேண்டுமானால், அதனை ஒடித்துக் கடித்து மென்று சாற்றைக் குடித்தல் வேண்டும்; சக்கையை உமிழ்ந்துவிடுதல் வேண்டும். அல்லது அதனை ஆலையிற் கொடுத்து அரைத்துச் சாறு வேறு சக்கை வேறு ஆக்கிச் சாற்றை எடுத்துக்காய்ச்சிச் சர்க்கரை—கற்கண்டாக்கித் தின்றல்வேண்டும். இதில் இவ்வளவு கஷ்டம் இருக்கின்றது! ஆனால் தில்லைக்கரும்பினுள்ளிருந் தேனைப் பருகுதல் மிக எளிது! எளிது!! எளியவர் செல்வர்—ஈ எறும்பு எல்லோருக்கும் எளிது!!! எப்பொழுதும் கிடைக்கும்! என்றும் இனிக்கும்!! கொல்லைக்கரும்பைப் பல்லுடையவர்கள்தான் பருகலாம்! தில்லைக் கரும்பைப் பல்லுடையவர்களும் பருகலாம்! பல்லிலாதவர்களும் பருகலாம்!! பச்சைப் பிள்ளைகளும் பருகலாம்! பழுத்த கிழவர்களும் பருகலாம்! ஆடவர் பெண்டிர் இருபாலாரும் அகமிக மகிழ்ந்து பருகலாம்! அனைத்துயிரும் பருகலாம்! ஆ! ஆ! என்ன எளிமை!! என்ன சுதந்திரம்!!! அரைக்காசுகூடச் செலவில்லை! ஆனால் அன்பிலாதவர்கள் மட்டும்பருகமுடியாது!

இனி, இயற்கையாகப் பாலப்பருவத்திலுள்ள கரும்பும் வைரம் விழுந்து முற்றிய கரும்பும் இனிக்காது; இளங்கரும்பே இனிக்கும். இவ்வாறே, தில்லையில் திகழுங்கரும்பு ஒருகாலத்தும் அழிவில்லாததாய் என்றும் இளமையுடையதாய் இருத்தலால் எல்லையில் மதுரமுடையது. இத்தில்லைக் கரும்பின் தெளிவைப் புகழாதார் யாவர்? இத்தீங்கரும்பின் சுவைகண்ட தெள்ளுதமிழ்ப் புலவர்கள் உரைகளைக் கேளுங்கள்! கேளுங்கள்!!

> கண்டங் கரியதாம் கண்மூன் றுடையதாம்
> அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
> உடலுருகத் தித்திக்கு மோங்கு புகழொற்றிக்
> கடலருகே நிற்குங் கரும்பு.

—பட்டினத்தார்.

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்து ளுணர்ந்தாலும்,
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத்தாலு மித்தனைக்குந்
தித்திக்கு மினித்த சுவைக்கரும்பே.

—இராமலிங்கசுவாமிகள்:

இஞ்ஞானக் கரும்பே கரும்பு. மற்றவை யெலாம் துரும்பே! இத்தில்லைக் கரும்பைக் கண்டானந்தித்தோர்க்கே இதன் அருமை பெருமை தெரியும். ஆ! ஆ! என்ன அழகு! என்ன ஒளி! என்ன மணம்! என்ன இனிமை! சொல்லுந்தரத்ததோ! இதனைக், "கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே!" இதனைப், "பேசாத நாளெல்லாம் பிறவாநாளே!" இதன் பெருமையை என்னென்பேம்! என்னென்பேம்! அக்கொல்லைக் கரும்பைப் படைத்ததும் இத்தில்லைக்கரும்பே! அதற்கு இனிப்பையூட்டியதும், அதில் உயிர்க்கு உயிராய்க்கலந்து நின்று அதனை விளங்கச் செய்வதும் இக் கரும்பே! "அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தும்" இக் கரும்பே! "அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வதும்" இக் கரும்பே! "நினைப்பவர்மனங் கோயிலாக்கொண்ட"தும் இக்கரும்பே! "எத்துவார் இடர்கள்தீர்ப்பதும்" எண்ணில் புகழுடையதும் இக்கரும்பே! அந்தோ! இத்தகைய சிந்தைக்கினிய செவிக்கினிய மெய்க்கினிய வாய்க்கினிய கைக்கினிய கண்ணுக்கினிய தில்லைக் கரும்பை விட்டு விட்டு ஏனோ இரும்பை—உலக போகத்தைக் கைக்கொள்ளல்வேண்டும். கரும்பு தின்னக் கைக்கூலியா? "கரும்பிருக்க இரும்பு கடித் தெய்த்த வாறே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லியதுபோல், உலகத்து மக்களுட் பலர் இப்பேரின்பத்திளைப்பில் ஆழ்ந்து கிடப்பதை விட்டு விட்டு, எதையெல்லாமோ, "இன்பந்தருவது! இன்பந் தருவது!" என்று போய் வீழ்ந்து ஆழ்ந்து கிடக்கின்றார்கள்! அந்தோ! மடவார் மொழியினைக் கரும்பென மயங்கி நிற்பார் எத்தனை பெயர்? கள்ளுக்குடிப்பதிலும் கறி தின்பதிலும், களியாட்டயர்வதிலும், குட்டைப் புராணம் படிப்பதிலும், மஞ்சிவிரட்டிலும், மாடுவிரட்டுவதிலும், நாடகக் காட்சிகளிலும், நவீன நாவல்களிலும், பட்டங்களிலும், பரிசுகளிலும், கைகொடுப்

பதிலும், பணப் பைகொடுப்பதிலும், வெறும் ஆடம்பரங்களிலும், வீண் பேச்சிலும், வெட்டிவார்த்தையிலும், பெண்ணிலும், மண்ணிலும் மற்றுமுள்ள எண்ணிலா இகபோகங்களிலும் இன்பம் உளதென மயங்கி நிற்போர் எத்தனை பெயர்? "இன்பமாகப் பொழுது போகவில்லையே!" என இரங்கி நிற்போர் எத்தனை பெயர்? இவ்வாறு இவர்கள் அயர்ந்து நிற்பதன் காரணம் என்னை? சமய ஞானம் இன்மையேயாகும். சமயஞானம் பெறுதற்குச் சமய நூல்களை ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்து, ஆராய்ந்து, "மெய்ப்பொருள் யாது? பொய்ப்பொருள் யாது? இன்பந் தருவது எது? துன்பந் தருவது எது?" என அலசி அலசிப் பார்த்தாலொழிய அப்பேரின்பப் பொருளைக் காண்டல் அருமையேயாகும்.

ஆனால் அதனை அநுபவித்தல் மிக எளிது! எளிது!! காட்டிலுறைதல் வேண்டாம்! கடுந்தவம் புரிதல் வேண்டாம்! காய்கனி சருகு காற்றையே பருகுதல் வேண்டாம். வீட்டிலுறையலாம். வெள்ளியம்பலத்திற் காணலாம்! வீடு பெறலாம்! பொன்னம்பலத்திற் காணலாம்! போற்றலாம்! ஏற்றலாம்! இடர்கள் தீரலாம்! இணையடி நீழல் சேரலாம்! இடையறா இன்பம் துய்க்கலாம்! துய்க்கலாம்!! இம்மெய்ப்பொருள் யாது? இதுவே, திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கரும்பு. இப்பூங்கரும்பே நமது நடராஜராஜ வள்ளலாராகும். இப்பூங்கரும்பினைப் பொருந்திய பிடியாது? நமது சிவகாம வல்லித்தாயாரேயாகும்.

தனித்தனிமுக்கனிபிழிந்து வடித்தொன்றாக்கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டினிறக்கி
யெடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
யடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே.

—இராமலிங்க சுவாமிகள்.

சமய வாழ்க்கை.

ஸ்ரீமான் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., L.T.
எழுதியது.

(இஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

சமயியானவன் அடுத்தபடியாக உணர்வது ஒன்றுண்டு; எல்லாவற்றையும் ஓரமைப்பிற்குட் படுத்திப் பரம்பொருள் இயக்கி வருதலின் குறிப்பை உணர்ந்து, அக்குறிப்பின் வழிநடக்க முயலுவன். யாவும் திருவருள் வெள்ளத்தின் வழி அறிந்தும் அறியாமலும் சென்றுகொண்டிருப்பதைக் காண்போன் புத்திபூர்வமாகவே அத்திருவுளக் குறிப்பின்வழி நடக்க விரும்புவான். இதனை மாணிக்கவாசகப்பெருமான் "அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு போமாறமைமின்" என்று அறிவுறுத்தியருளினர்.

அக்குறிப்பு யாதாயிருக்கலாம்? தெய்வமில்லையென்பார் அவன் குறிப்பு யாதென வினவவேண்டியதின்று. அவர் குறிப்பெல்லாம் தங்குறிப்பே; ஐம்புலன்கள் காட்டும் அவலக்ஷியமே. ஆனால் தெய்வம் உளதென்பார் வினவாதிருக்க இயலாது. அவ்வினாவிற்குவிடை அவரவர் மனச்சான்றின் மூலமாய்ப் பிறக்கும். "நானேதுமறியாமே என்னுள்வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்" என்று நாவுக்கரசர் நமக்கு உபதேசித்துள்ளார். ஆனால் அங்ஙனம் இறைவன் காட்டுங் குறிப்பை, நாம் நமது பக்குவக் குறைவு காரணமாக அசட்டை செப்பவும், விபரீதமாய்க் கொள்ளவும், உணராதே விட்டிடவுங்கூடும். இவ்வாறு அக்குறிப்பின் விளக்கம் நமது பக்குவத்தைப் பொறுத்து நிற்றலால் பரம்பொருளோடு ஒற்றித்து நின்று உண்மை உணர்ந்தார் வாய்மொழி நமக்குச் சாலச் சிறந்ததாகும். ஞானச்செல்வராகிய தாயுமானர் ஒரு சமயத்து, இரண்டுவரங்களை இறைவன்பாற்கேட்டருளினர். அவை

"வந்தித்து நின்னை மறவாக் கடனாகச்
சிந்தித்து நிற்க அருள்செய்யாய் பராபரமே."
"எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே." என்பன.

இயேசுநாதரை ஒருவன்கண்டு "சுவாமீ, ரக்ஷிப்புப் பெறும் பொருட்டு யான் செய்யவேண்டியது யாது?" என்று கேட்டான். அதற்கு அவர் "உன் முழு அன்பையும் உன் முழு ஆன்மசக்தியையும் கொண்டு உன் கடவுளை நேசி. உன்னை அடுத்துள்ளவரை உன்னைப்போலவே நேசி" என்று பதில்தந்தார்.

இவ்விரு பெருஞானிகளும் கூறியதில் பொருளும் முறையும் ஒத்திருத்தல் பெரிதும் கவனிக்கத்தக்கது. இவ்வுபதேசமொழிகள் கூறும்பொருள்கள் சாதனமட்டுமன்று; சாத்தியமுமவையே. சிந்தையும் நெறியும் செல்லா நிலைமை" தந்து என்றும், "அந்தமில் இன்பத்து அழிவில்வீடு" என்றும் போற்றப்படும் மோக்ஷநிலை, இறைவன் திருவடியில் இரண்டறக்கலத்தலே என்ப. அவ்வாறு கலந்தோர்க்குமேல்விவரித்த ஒற்றுமைக்காட்சியும், திருவருட் குறிப்பின் வழி ஒழுகும் இயற்கையும் வாய்க்கும். எனவே ஆன்மாக்கள் யாவரும் இறைவன் திருவடிப்பேறெய்தி இன்புற வேண்டும் என்பது, 'சும்மா இருந்தோ' புலப்பட உரைத்தோ உயிர்கட்குத் தொண்டுபுரிய வேண்டும் என்பதும் திருவருட்குறிப்பென்று தெரிகின்றது. இங்ஙனம் இறைவனோடும் உயிர்களோடும் ஒற்றித்து நிற்கும் ஒழுக்கமே சமய வாழ்க்கையின் உயிர் நிலையாகும். எங்கு இவ்வொழுக்கமுண்டோ அங்கு உண்மைச் சமயவாழ்க்கையுண்டு; எங்கு இது இல்லையோ அங்குச் சமயமில்லை. மற்றவை இருப்பினும் ஒன்றே; ஒழியினும் ஒன்றே.

சமய வாழ்க்கையின் இயல்பைப் பொதுப்படக் கூறினோம். இனி உண்மையாய்ச் சமயநெறி செல்வோரது குணஞ்செயல்களின் தன்மைகளைச் சிறிது விளக்குவோம். செம்பொருட் காட்சி கிடைக்கப்பெற்றார்க்கு எல்லாம் இறைவனடிமை என்றும் அவன் எங்ஙனும்வியாபி என்றும், அவனன்றி ஓரணுவும் அசையாதென்றும் தெளிவாய்த் தெரிகின்றது. இவ்வுண்மை தெரியவே, 'யான்' "எனது" என்னும் எண்ணம் அற்றுப்போகின்றது. "யான் தான் என்னும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றாது சத்தியம்." என்றார் அருணகிரிநாதரும். இங்ஙனம் 'நான்'

அறிந்தமையால் குழந்தைகள் போலாகின்றனர். குழந்தை நிலையடைந்தாலன்றி உண்மை தெரியாதென்று இயேசுவும் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸரும் உபதேசித்திருக்கின்றார்கள். அகம்பாவ நாசத்தால் விளையும் எளிமையில், இறைவன் பெருமை பதிகின்றது; உயிரின் பந்தம் கழன்று போகின்றது; கண்ட நிலைபோய் அகண்ட நிலைவாய்க்கின்றது; சீவன் சிவனாகின்றான்.

அகந்தைவென்ற அடியார்க்கு அணைகடந்தெழும் அன்புண்டாகும். அன்பிருக்குமிடத்தில் தூய்மையுமுண்டு; இன்பமுமுண்டு. ஆகவே அன்னார், "மாசிலாத மணிதிகழ் மேனி" யுடையராவர்; "மனத்துக் கண் மாசில" ராவர்; அவர் சொல்லும்

"இன்சொலால் ஈரமளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்"

என்ற திருவாக்கிற் கிலக்கியமாயிலகும். அவர் கோதிலாக் குணப் பெருங் குன்ற" ங்களாவர். இம்மட்டோ? குழந்தை யொத்த இவரே வீரர் போற்றும் தீரராயுமிருப்பர். "வானந்துளங்கில் என்? மாகம்பமாகில் என்? தானந்துளங்கித் தலைதடுமாறில் என்?" என்று கூறி உதாசினமாயிருக்க வல்லார் அவரே.

"ஞானச்சுடர் வடிவாள் கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே" என்று நமனையும் அஞ்சாது அறைகூவி அழைக்கவல்லா ரவராயின், அவர்வீரம் நம்மால் விளம்புந் தகையதாமோ? அன்றியும் சாமானியர் நுகரும் இன்ப துன்பங்கள் அவர்கட்கில்லை. மூவாசை யுற்றோர்க்கே மூண்டெழுந் துன்பங்கள். இந்த அடியார்களோ "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்;" "ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;" அவர்கட்கு "இன்பமே எந்நாளும் துன்பமில்லை." அவர்கள் நுகரும் ஆனந்தம் பிறர் தம் அறிவிற்கெட்டா அருமைப்பாடுடையது. அந்த "தனிப் பரமானந்தத் தித்தித்து அறிந்த அன்றே கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக்கைத்தது." என்று அருணகிரி நாதர் அனுபவித்துக் கூறுகின்றார். இவ்வாறு, உண்மைச் சமய வாழ்க்கையின் பயனைப்பெற்றோர்—அடியார்கள்—அறிவிலும் அன்பிலும்

ஆற்றலினும், இன்பினும் தலைவனோடொப்ப விளங்குவர். இறைவனது எண்பெருங் குணங்களும் தம்மிடம் பதிந்தன என்று பொருள்பட, "எண்குணத்துளோமே" என்று அவர்கள் கூற இடமிருக்குமாயின், அவர்தம் பெருமையைப்பற்றி இன்னும் பலசொல்லல்வேண்டா. அந்தகையபெரியார் உடம்போடிருப்பினுமிருப்பர்; அதைஒழித்து விளங்கினும் விளங்குவர். மண்ணுலகில் அவர் வாழுங்கால், அவர்களைக் கண்டுபிடித்தல் எளிதாயிராது. "இலைமறை காயென இருக்கும் ஞானியே" என்றார் சிவப்பிரகாசர். சிலர் பித்தர் போலவும், பாலர்போலவும் திரிவர்; சிலர்கடுந்துறவிகளாய்க் காணப்படுவர்; இன்னும் சிலர் இல்வாழ்க்கையில் இருப்பினுமிருப்பர். அவர்கள் 'எந்நிலையில் நின்றாலும் எவ்வேடங்கொண்டாலும்' மேற்சொன்ன அடிப்படையான அடியார் இலக்கணத்தில் வழுவார்.

சமய வாழ்க்கையில் நன்கு நடப்போர் இல்வாழ்க்கையில் இருப்பினுமிருப்பரென்று சற்றுமுன்பு குறித்தது சிலருக்குத் தவறென்று தோன்றவுங்கூடும். மூவாசை முடிந்தோர்கட்கு முக்தி கிடைக்கும் என்று யாவரும் முழங்கா நிற்கவும், உண்மையடியார்கள் இல்வாழ்க்கையிலிருப்பினு மிருப்பர் என்பது பொருந்துமோ என்பது ஆசங்கை. ஆன்றோர்வாக்கியங்கள் சில ஒன்றோடொன்று முரணுவ போல்தோன்றும். "அறந்தானியற்றுமவனிலும் கோடி அதிகம் இல்லந்துறந்தான்; "கூர்வேல் விழிமங்கையர் கொள்கையிலே—சேர்வேன் அருள் சேரவு மெண்ணுமதோ" என்பன போன்ற ஆன்றோர்மொழிகள் பலவுள. ஆனால் 'இல்லறமல்லது நல்லறமன்று"

" காவியுடுத்தும் தாழ்சடை வைத்தும் காடுகள் புக்குந் தடுமாறிக்,
காய்கனி துய்த்துங் காயமொறுத்துங் காசினி முற்றுந் திரியாதே
சிவனுடைக்கம் பூதவொடுக்கம் தேறவுதிக்கும் பரஞான
தீபவிளக்கங் காண, எனக்குன் சீதள பத்மந் தருவாயே"

என்பன போன்ற திருவாக்குக்களுமுண்டு. இவை தம்முள் ஒன்றோடொன்று மலைவனபோற் காணலாம். உண்மையில், மலைவொன்

றையில்லை. காட்டிலிருந்தாலும் சரியே; வீட்டிலிருந்தாலும் சரியே; ஆசைக்கூட்டிலிருந்து மட்டும் அறவே விடுபட்டாலல்லது முக்தி கிட்டாதென்பதில் ஐயமில்லை. துறவுவேடம் பூண்டு வெளிப்பட்டு விட்டோர் சிலர் ஆசையை வெல்லாதலைதலும், வீட்டில் வசிப்போரிற் சிலர் அதை அறவே வென்று மெய்யடியார்களாய் விளங்குதலும் மெய்ச் சரிதங்கள் வாயிலாய் உணர்கின்றோம். நாயனாரும் "அறத்தாற்றி னில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்?" என்றே புகன்றனர். "அறத்தாற்றின் இல் வாழ்க்கை ஆற்றுவ" தாவது, சமய நெறிப்படி கிருகஸ்த தருமத்தை நடத்தல். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் மாணவர்களில் ஒருவராய ஸ்ரீ நாகமகாசர் இப்படி இல்லறத்திலேயே துறவறஞ் சாதித்த பெரியார் என்ப. பழையநாட் சரிதங்கள் பலவுள. பெரியபுராண நாயன்மாரிற் பலர் அத்தகைய ஆற்றலுடைய அடியாரன்றோ? ஆகவே இல்லறம் துறவறம் என்பவற்றில் எதைக் கொள்ளினும், அவாவை அறுத்து, கடமைகளைத் திருவருளியக்கும்வழி செய்து வரவேண்டும் என்பதே சாரமாய்க் கொள்ளத்தக்கது. இவ்விரு வழிகளில் சமய வாழ்க்கை வாழ்தற்கு எது அதிக துணை செய்வது என்பதற்குப் பலர் பலவாறு பதிலுரைப்பர். இல்லறத்திருந்தே சாதிக்குந் துறவை சூரியோதயத்திற்குப் பின்னர்க் கடைந்தெடுக்கப்பட்ட பாலடைக் கட்டிக்கும், துறவறநிலையிலிருந்தே பெறும் துறவை சூரியோதயத்திற்கு முந்தி யெடுக்கப்படுவதற்கும் உவமிப்பர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். முன்னதை இரும்பிற் பதித்த மாணிக்கத்திற்கும் பின்னதைத் தங்கத்திற் பதித்த மாணிக்கத்திற்கும் உவமிப்பர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள். இவ்விரண்டுகடுநெறிகளில் எது அதிக கடினமென்று தருக்கித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இல்வாழ்வோர் பலர் ஞானத்திற்குத் துறவற நெறியே சிறந்த சாதனம் என்று எண்ணலாம். சமய நெறியில் தீவிரமாய்ச் செல்ல விரும்பு மொருவர்க்கு எவ்வழி உத்தமமென்று காண்கின்றதோ அந்நெறி அவர்களுக்குச் சிறந்தது. எந்நெறியை மேற்கொள்ளி

னும் அதன் கடமைகளைச் சமய உணர்ச்சியோடு திருந்தச் செய்தால் உள்ளத்துறவுண்டாம். அப்போது மேற்சொன்ன சமயியிலக்கணம் வந்தடைதல் ஒருதலை. “கிராமைசயினரேல் தெய்வமுண்டோ?” இல்லை; ஒருநாளுமில்லை. உண்மைச் சமய வாழ்க்கை நடத்துவோர்,

> “நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
> மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
> மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
> குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்.”

இவர் வீட்டோடிருப்பினும் இருப்பர்; அவசியம் நேர்ந்த காலத்து தேசத்தொண்டும், தாய்மொழித் தொண்டும் புரியினும் புரிவர்; மன்பதைகட்கே ஆசாரிய ஸ்தானம் வகிப்பினும் வகிப்பர்.

பூமியானது தினகதி வருஷகதி என்னும் இருவகைச் சலனங்களை ஒவ்வொரு நிமிடமும் நிகழ்த்தி வருதல் போல் உலகத்தில் பல்வேறு கடமை செய்யும்போதும், இறைபடிவிட்டு விலகாதிருத்தல் ஒல்லும் என்பர். தூணை ஒரு கையிற் பிடித்துக்கொண்டு வேகமாய் அதைச்சுற்றி ஓடியாடும் குழந்தை விளையாட்டை இதற்குவமானமாக ஒரு பெரியார் எடுத்துக்காட்டியுள்ளார். உள்ளத்துறவை உயரிய குறிக்கோளாய் நம் நாட்டவர் தொன்றுதொட்டே பாராட்டி வந்திருக்கின்றனர். அவ்வாறு செய்வித்தது அகத்துறவாய் விளையும் ஆனந்த அனுபவப் பயிற்சியே. சிற்றின்பத்தைத் துறப்பது பேரின்பத்தின் பொருட்டு. “பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய்” முற்றச் செய்யும் துறவும் இந்நாட்டிற்குத் தெரிந்ததொன்றே. இன்ப நாட்டம் எல்லா உயிர்க்கும் உண்டென்பதை,

> “எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்.”

என்னும் சூத்திரத்தால் மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியம் உணர்த்துகின்றது. உத்தம இல்வாழ்க்கையில் உதிக்கும் இன்பத்

திறனை எல்லாம் எடுத்துவிளக்கும் அந்நூலே. பின்பு, துறவை அதன்பயனாக விதிக்கின்றது. இதை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்பரிசுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்த தன் பண்பே.

என்னுஞ் சூத்திரத்திற் காணலாம்.

உலகில் உண்மைத் துறவிகள் அருகிவருகின்றனர். துறவின் பெருமையும் இந்நாளில் பலர்க்கு விளங்குவதரிதாய் வருகின்றது. துறவிகளை யெல்லாம் சோம்பர் என்று கூறவும் பலர் துணிந்து விட்டனர். அப்பழிக்கு இலக்காகப் போலித்துறவிகள் பல்கி விட்டனர். இந்நாட்டில் சுமார் ௨0000 பேர் சன்னியாஸ கோலத்தோடு திரிகின்றார்கள் என்றுகேள்வி. அத்தனைபேரும் உண்மைத் துறவிகளாயிருக்க முடியுமோ? ஆசைக்களஞ்சியமான ஆசாமிகள் பலர் ஆண்டிவேடந்தரித்துத் திரிவதை யாரே அறியார்? இல்லறத்திலிருந்து தம் ஆசைகளை அறநெறியில் அநுபவித்து, தமக்கும் பிறர்க்கும் உபகாரிகளாய் விளங்குதலை விடுத்து, இப்பொய் வேடதாரிகள் நாட்டிற்குப் பாரமாய்த் திரிகின்றார்கள். இவர்கள் தாம் கெடுவதோடு, உண்மைத் துறவிகட்கும் இழுக்குத் தேடித் தருகின்றனர். இவர்கள் தொகையைக் குறைக்கப் பொதுஜனங்கள் முயல வேண்டும்.

ஆயினும், போலித்துறவிகள் பலிருப்பதுகொண்டே, உண்மைத் துறவிகளைப் பழித்தல் மேன்மையாகாது. மெய்த்துறவு என்பது எளிதான பொருளன்று. அது சமய வாழ்க்கை என்னும் சுரங்கத்தில் நெடுந்தூரந் தோண்டிச் சென்ற பின்னர் கிடைப்பதாகிய தங்கம்; மனிதப்பிறப்பின் தனிப்பெரும்பயனாய்ப் பெரியோர் போற்றி வந்ததொன்று. ஏனைய நாடுகள் பல, பொன்னையும், பொருளையும், மண்ணையும் பெண்ணையும், பெரிதென மதித்து இன்பக்களியாட்டயர்ந்த காலத்தும், நமது தாய்நாடு, துறவின்பால் கொண்டிருந்த மதிப்பைச் சிறிதும் குறைக்கவில்லை. அதையே

குறிக்கோள்கள் எவற்றிற்கும் சிறந்ததெனச்செப்பி அநுட்டித்து வந்தது. மெய்த்துறவிகள் எந்நாட்டிலும் நூற்றுக்கணக்காகக் கிடைக்கமாட்டார்கள். இதை கூறுவதுபோல் பல ஆயிரத்திலொருவர், ஞானத்தை நாடிப்பாடுபடுகின்றனர். அப்படி முயலும் பல ஆயிரவரில் ஒருவர் தான் ஆண்டவன் இயல்பை உள்ளவாறு அறிகின்றார். புத்தர், மணிவாசகர், சுகர், இராமகிருஷ்ணர், தாயுமானார், பட்டினத்தார், இயேசு, விவேகாநந்தர் முதலியோர் சாமானியமாய்க் கிடைக்கக் கூடியவரல்லர். மனித விருக்ஷத்தில் அருமையாய்ப் பழுக்கும் அமுதக்கனிகளன்றோ அவர்கள்? இவர் போன்ற பெரியார்கள், நாமெள்ளக்கூடிய சோம்பேறிகளல்லர். சோம்பர்கள் ஞானச்சோம்பர் எனவும் ஊனச் சோம்பர் எனவும் இருவகைப் படுவர். பின்னவர் மலிந்துவரும் இந்நாளில் அவரைக் கண்டித்தல் அவசியமே. ஆனால் ஞானச்சோம்பர்களின் இயல்பை நாம் மறந்து விடாது போற்றுவோமாக. (தொடரும்)

ஜீவகாருண்யச் சிந்து.

பழந் தமிழ் நாட்டினிலே—நல்ல
பக்தர்கள் கோடியாத் திகழ்ந் திருந்தார்
அப்பர் பிறந்திருந்தார்—இறைவனை
ஆலால சுந்தரர் தோழமை கொண்டார்
காழியிற் பிள்ளையாராம்—அந்தக்
கவுணியர் சைவத்தைப் பேணி நின்றார்
மாணிக்க வாசகராம்—சைவம்
வளரப் பெருமழை பொழிந்து நின்றார்
அந்தநன் னாளினிலே—கெட்ட
அநியாயக் கொலைத்தொழில் நடக்கவில்லை
சூதுபொ றாமை யில்லை—பிறரைத்
துன்புறச் செய்பவர் மலிய வில்லை

பிணியில்லைப் பஞ்சமில்லை—எண்ணில்
பேச்சினில் செய்கையில் பிழையுமில்லை
பாவமாக் கெட்டுப்போச்சு—இரக்கமும்
வாய்மையும் பெருமையும் மறைபலாச்சு
சிவன்கோவில் தரிசனமாம்— அங்கே
சிவவேடப் பெருமைகள் மிகமலிவாம்
அங்கத்தில் திருநீரும்—நிறைய
அதன்மேலே ருத்ராக்ஷக் கோவைகளாம்
நாவினில் சிவநாமம்—நல்ல
நறுமணச் சந்தனம் மார்பினிலே
மண்டபப் படிசெய்வார்—மேன்மையா
மற்றும்பல திருப்பணி செய்திடுவார்
வயிற்றில் வலி வந்தானால்—சற்று
வாயா லெடுத்தொரு மயக்கமிட்டால்
ஆடடா சாமி யென்பார்—அங்கு
அஞ்சிரண்டுந் தெரியாதபேர்வழிகள்
பிடித்தது டாகறுப்பன்—கூடப்
பேயாண்டி தொடர்ந்திட்டான் பேச்சியுடனே
பூசையொன்று போடவேண்டும்—அதற்குப்
பிடியடா குலாடு கோழியுடனே
கொண்டுபோய்க் கழுத்தறுப்பாய்—அதனால்
குணமாம் வயிற்றுவலி மயக்கமென்று
கூறியே ஆடுகின்றார்—இதனைக்
குறியெனக் கொண்டுசில மானிடர்கள்
வாயிலாப் பிள்ளைகளாம்—ஆடுகளை
வரிசை வரிசையாப் பிடித்துவந்து
சந்நிதியின் முன்னிறுத்தி—மஞ்சள்
தண்ணீராத் தலைவழி ஊற்றிவிட்டுக்
கொடுத்திடு பலியென்பார் —தண்ணீர்
குறுகுறு வென்னவே உடலசைத்தால்
ஆவெனத் தான்மடக்கி —அதன்மேல்
அஞ்சாமல் யமதூதர் போலேறி

மண்டியிட்டு உட்கார்ந்து—சைவத்தின்
மாண்புறு பெருமையை மறந்தவராய்
கத்திகொண்டு கழுத்தறுப்பார்—இந்தக்
காட்சியினைப் பார்ப்பதும் பெரும் பாவம்
ஐயையோ முறையாமோ—இப்படி
அலற வலறவதைத் தான்மடக்கிக்
கழுத்தினை முறித்தறுக்க—அவைகெட்ட
காரியங்களேதேனுஞ் செய்ததுண்டோ
மக்களுக்குத் தீங்குசெய்து—ஆடுகள்
மாருட்டஞ் செய்ததைக் கேட்டதுண்டோ
ஏழைப் பிராணிகளாம்—அவற்றை
ஏதற்காகக் கொலைசெய்ய வேண்டுமையா
வயிற்றுவலி அம்மைபேதி—நமக்கு
வரவேண்டு மென்றவைகள் வேண்டவில்லை
நம்முடைய ஊழ்வினையால்—வருகின்ற
நன்மைக்குந் தீமைக்கும் யார்பொறுப்பு
ஆடுகள் என்னசெய்யும்—அந்த
அப்பாவிக் கோழிகள் யாது செய்யும்
ஐயவோ பெரியோரே—நீங்கள்
அநியாயக் கொலைத்தொழில் செய்யவேண்டாம்
பயனொன்று மில்லையய்யா—இந்தப்
பாழான கொலைத்தொழில் வேண்டாமையா
தேங்காய் பழமில்லையா—நல்ல
தேனுடன் சர்க்கரை பாலில்லையா
வேண்டுமட்டு நிறையவைத்து—சுவாமியை
வேணுமட்டுங் கும்பிட்டால் போதுமையா.

முரு.

உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள
எங்கள் மக்களும் நாங்களும் என்செய்வோம்
பொங்கலிட்டுப் புதமணஞ் செய்கிறீர்
எங்கள் பாவம் இறைபவர் கேட்பாரே.

திருநாமப் பெருமை.

சிவபெருமான்.

சிவனே சிவனே சிவனே யென்பார்பின்
சிவனுமை யாளொடுங் திரிவன்—சிவனருளால்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து. —நீதிவெண்பா.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

—ஔவைப்பிராட்டியார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனாம நமச்சிவாயவே

தும்மலிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்து போழ்தினும்
அம்மையினுந் துணை யஞ்செழுத்துமே.

—திருஞானசம்பந்தர்.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சிவாயவே

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
　　தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவாறெங்கனே போமாறேதோ
　　மாயமாமிதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
　　திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சிவாய
　　வென்றெழுவார்க் கிருவிசும்பிலிருக்கலாமே.

—திருநாவுக்கரசர்.

வீரகாகளம்.

(வேற்றி வீரன் எழுதுகிறுர்.)

அர்ச்சுனன் மாதரின்பத்தில் மிக்க விருப்புடையவன். உலக போகத்தை மிக விரும்பி அநுபவிப்பவன். கொஞ்சம் ஆணவ முடையவன். ஆனல் சுத்தவீரன். கர்ணனைக் கொல்வதற்காக பாசுபதாஸ்திரம் வாங்கவேண்டியது அவசியமாயிருந்தது. இதற்காக சிவபெருமானைக்குறித்துக் கடுந்தவம்புரிந்தான் நமது அர்ச்சுன மகாராஜன். வெயில் மழை பனி முதலியவற்றைந் தாங்கிப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று உணவு தண்ணீர் முதலிய எதையும் அருந்தாமல் ஒரு காலில் நின்று தவம் புரிகின்றான். பல நாட்கள் சென்றன. இவனைச் சோதிக்க எத்தனையோ தெய்வ ரம்பைகள் வந்தார்கள். ஆடினர்கள்; பாடினர்கள்; கையிருப் பெல்லாம் காட்டினர்கள். ஒன்றுக்கும் நமது அர்ச்சுனக்காளை அசையவில்லை. பிறகு தேவேந்திரன் நேரே வந்து, "அப்பா! ஏன் இப்படிக் கடுந்தவம் புரிகின்றாய்" என்று கேட்டான். விஷயத்தை அருச்சுனன் சொன்னான். அதனைக்கேட்ட தேவேந்திரன் சிரித்துக்கொண்டு, "வேதங்கட்கும் முனிவர்கட்கும் தேவர்கட்கும் எட்டாத சிவபெருமான் உன்னுடைய தவத்திற்கா வரப்போகின்றார்; வீண் வருத்தமேயன்றி இம்மாதவம் பயன்படப்போவதில்லை" யென்று சொன்னான். இதைக்கேட்டவுடனே அருச்சுனனுக்கு அளவிடமுடியாத கோபம் பொங்கிவிட்டது. கடுமையாக தேவேந்திரனை உருத்துப்பார்த்து "என் உயிர் அழியுமட்டும் இந்தக்கருத்தை விடமாட்டேன்" என்று கம்பீரமாகவும் தைரியமாகவும் சொன்னான். "பரமசிவனைக் காண்பதென்று தீர்மானித்து விட்டேன்; அந்த முயற்சியில் இறங்கிவிட்டேன்; பார்த்தே தீர்

வேன்; இல்லையானால் சாவேன்; இதற்கிடையில் என்ன துன்பம் வரினும் அநுபவிப்பேன்; எந்த இன்பத்தையும் அனுபவிக்க மாட்டேன்" என்று ஒரே நிலையாக நின்றான் சத்தியவீரன்; அருச்சுனச் செல்வன்! இத்தனை வீரமுள்ள ஒருவனுக்கு முன்னால் பரமசிவன் என்ன செய்தல்கூடும். வந்தார்! கேட்டவரமெல்லாம் தந்தார். சத்தியவீரனுக்கு—கொண்டகொள்கையை விடாப்பிடியாகப் பற்றி நிற்பவனுக்கு யாதுதான் கிட்டாது?

* * *

பிரஹலாத ஆழ்வார் ஒரு சிறந்த விஷ்ணுபக்தர். ஆனால், ஒரு சத்தியவீரர். இந்தப் பிரஹலாதன் சிறு பிள்ளையாயிருந்தார். இவர் தகப்பனாகிய இரணியன் ஒரு அகங்காரங்கொண்ட மூர்க்க சிகாமணி. உலகமெல்லாம் தன் பெயர் சொல்லி வாழவேண்டுமென்று விரும்பினான். மழு ஏழுத்த பேர்வழிகள் யாவரும் அவன் சொன்னதைக்கேட்டு உயிர்தாங்கி நின்றனர். இந்த சங்கதி நமது பிரஹலாதனிடத்து நடக்கவில்லை. உபாத்தியாயர் "இரணியாய நம" என்று சொல்லச்சொன்னார். பிரஹலாதன் "நாராயணாய நம" என்று கூறினார். என்ன சொல்லியும் "இரணியாய நம" சொல்ல ஆழ்வார் இணங்கவில்லை. இதனை யறிந்தான் இரணியன். கோபம் பொங்கிவிட்டது. கண்சிவந்து விட்டது. மீசை தலைக்குப் புறத் துடிக்கிறது. கொண்டுவா பயலை யென்றான். பிரஹலாதன் "நாராயணாய நம" என்ற திருநாவுடன் புன்சிரிப்புள்ள முகத்துடன் வந்து நின்றார். கண்டான் இரணியன். நெறநெற வென்று பல்லைக்கடித்தான்; ஆட்களைவிட்டு ஆயுதங்களினாலே குத்திக்கொல்லச் சொன்னான்; நெருப்பை வளர்த்து அதிலே தள்ளினான்; ஜெயிலில்போட்டு விஷப்பாம்புகளை யேவிக் கடிக்கச் செய்தான்; யானையை மதமேற்றிக் கொல்லவிட்டான்; கல்லிலே கட்டிக் கடலிலே போட்டான். என்ன செய்தாலும் நமது பிரஹலாத வீரத்தநம் யாது செய்தது தெரியுமா? "நாராயணாயநம" என்ற சொல்லை நாவினின்றும் பிரிக்கவில்லை. "உடல் அழியினும் அழிக. என்னுயிர் நீங்கினும் நீங்க. என்னைச் சித்திரவதை செய்யினும் செய்க. உண்மையான மந்திரத்தைச் சொல்லாமல் விடமாட்டேன். அறிவு

கெட்ட தகப்பன் சொல்லைக்கேட்கமாட்டேன்; மூடத்தனமாக இந்த உலகவாழ்வில் மயங்கிப் பணக்காரனை என் தகப்பன் காலில் விழுந்து "இரணியாய நம" சொல்லும்படி தம்பிள்ளைகளைக் கெடுப்பவர்களை நான் பின்பற்றமாட்டேன்" என்று நின்று கடைசி வரையில் சாதித்ததீரன். பச்சைக் குழந்தையிலேயே இந்த உண்மையைக்கண்டு சாதித்த செல்வச்சிறுபிள்ளை. இப்படிப்பட்ட அசையாத வீரர்களே கடவுளைக்காண்பார்கள்!

* * *

திருநீலகண்ட நாயனார் அறுபத்து மூவருள் ஒருவர். ஜாதியிலே குயவர். சிறந்த சிவபக்தர். இவர் ஒருநாளிரவு சுவாமி தரிசனஞ்செய்துவிட்டு வரும்போது வழியில் பெருமழை பொழிந்தது. அங்கிருந்த ஒரு தாசி வீட்டில் அணுகினார். அடியாரென வறிந்த அந்தத் தாசியானவள் இவருக்கு மிகுந்த மரியாதை செய்து மழை நின்றபிறகு வணங்கி வழியனுப்பி வைத்தாள். நமது திருநீலகண்டர் அவ்வீட்டிலிருந்து வருவதையறிந்த அவரது மனைவியாரான உத்தமக் கற்புள்ள அம்மாள் திருநீலகண்டரைப்பார்த்து, "எம்மைத் தொடக்கூடாது" என்று கூறினார். இதைக்கேட்டவுடன் என்ன செய்தார் நமது திருநீலகண்டர்? தெரியுமா? 'நீர் எம்மைத் தொடக்கூடாது" என்று பன்மையாகக் கூறியபடியால் இன்று முதல் உன்னையும் தொடாதிருப்பதோடு உன் இனத்தாராகிய பெண்மக்களையே தொடாதிருப்பேன் என்று கூறிவிட்டு அப்படியே பல வருஷமிருந்தார். மாதரின்பமே உலகில் பெறவேண்டிய பேரின்ப மென்று பல்விழுந்த பழங்கிழவரும் மீசையரும்பாத இளங்குழந்தைகளும் அலைந்து திரியும்போது ஒரு கட்டிளங்குமரன்—உடம்பில் உறுதியும் ஆற்றலுமுடைய ஒரு வாலிபன்—தான் தொண்டுகிழவனாகிற வரை மாதரின்பத்தை அடி போடு வெறுத்துவிட்டு மனைவியோடு உடனிருந்தே வாழ்ந்தாரென்றால் இவரைக்காட்டிலும் வீரர் யாவர்? இம்மாதிரியான ரோஷமும் உறுதியுமுள்ள வீரரைத்தான் உலகம் இப்போது எதிர்நோக்கி நிற்கின்றது.

பழமொழிக் களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார், எழுதியது.)

உலக மக்களில் சிலர் எதையாவது செய்ய முயன்றபோது வேறெதையும் பற்றிச் சிந்திக்கிறார்களில்லை. உலகத்திலே ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமானாலும் அல்லது தான் ஒரு உயர்ந்த பதவியை அடையவேண்டுமானாலும் அதற்கு மிகுந்த சாமர்த்தியமும் தைரியமும் சாதரியமும் முக்குளிக்கும் தன்மையும் வேண்டும். பின்னால் வரப்போகிற வெற்றிக்காகவும் நன்மைக்காகவும் முன்னால் கெட்டபெயரையோ தோல்வியையோ ஏற்றுக்கொள்ள வேண்டுமானாலும் சந்தோஷமாக வரவேற்க வேண்டும். பிடித்த பிடியையே பிடித்துக்கொண்டு அந்தவழிக்கே வரவேண்டுமென்று செய்வார்களானால் பெரும்பயன் விளையாது. சில மக்கள் தாங்கள் தான் பெரியோர்களென்று கருதுவதுடன் உலகிலுள்ள எவனும் தனக்கடங்கியே யிருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். இது எப்போதும் முடியாத காரியமாகும். வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டல்லவா? கூடியவரையில்சமாதானமாகப்போகவே வழிபார்த்தல் வேண்டும். பிறரை அடக்கிக் காரியம் சாதித்துக் கொள்ளவே முரட்டுக்குணமுள்ளவர் விரும்புவர். அதனால் எப்போதும்கலகமும் அவமானமுமே உண்டாகின்றன. ஆனால் சிலருடைய குணம் அப்படியே யிருக்கின்றது. என்ன செய்கிறது? "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா."

* * *

தற்போது நமது நாட்டில் எடுக்கிற முயற்சிகள் பெரும்பயன் விளையாது அழிந்து போகின்றன வென்று சொல்லி எனது நண்பரொருவர் வருத்தப்பட்டார். உண்மைதான். என்ன செய்கிறது. அந்த நாளில் தலைவர்களாக நிற்பவர்கள் பிறருக்கு வரும் இன்ப துன்பங்களைத் தங்கட்கு வந்ததாகப் பாவித்தனர். தற்காலத்தில்

எல்லாம் சொக்க நலம். பிறனொருவன் தலை தூக்காவிட்டால் தான் தனக்கு மதிப்பிருக்குமென்று கருதுகின்றனர். அதுவும் உண்மைதான். சமயம், நாடு, யாவும் ஜனங்களைப் பொறுத்திருக் கின்றன. ஜனங்கள் மீளக்கூட வழியிருக்கிறதோ இல்லையோ வென்ற நிலையில் மாட்டிக் கொண்டிருக்கின்றனர். ஒரு தலைவர் சொல்லுவதை பயபக்தியோடு கேட்கிற காலம் மலையேறிப் போய் விட்டது. ஆனல் பிடுங்க வராதபடி அவ்வளவு அபாயமாக மக் கள் மாட்டிக்கொண்டு கிடக்கின்றனர். என்ன செய்வது? "முள் ளில் சேலையைப் போட்டுவிட்டால் மெள்ள மெள்ளத் தான் எடுக்க வேண்டும்''

* * *

முந்தின காலத்தில் சாதுக்களுக்கு மதிப்பிருந்தது. கட வுளைக் கும்பிடுவதும் ஏதாவது நியாயவழியிலேயே கொஞ்சம் பணந்தேடுவதும் அதைக்கொண்டு சாப்பிடுவதுமா யிருந்தனர். வம்பு வழக்குத் தெரியாது. தம்மால் முடிந்தால் நன்மை செய் வார்கள். இல்லாவிட்டால் பிறருக்குத் துன்பமில்லாமல் காலத் தைக் கழிப்பார்கள். இந்தக்காலமோ அட அப்பா! பிறருக்குக் கேடுசெய்பவன்தான் சிறந்த மனிதன். குறைந்தபக்ஷம் பத்துக் குடியையாவது கெடுத்தால்தான் ஊருக்கு நாட்டாண்மைக்காரன் ஆகலாம். நல்ல மனிதர்கள் வர வர ஒதுங்கிப் போகிறார்கள். பொய்யும் புரட்டும் பேசி முன்னுக்குப்பின் விளங்காமல் வாயில் வந்தபடி பேசுபவர்களுக்குத்தான் இது வாய்த்த காலமாக இருக் கிறது. சாதாரணமாக இருக்கிறவர்கள் என்னசெய்வது? மௌன மாக இருந்தால் அவர்களைக்கூட சமயம்வாய்த்தால் இந்ததடபுடல் பேர்வழிகள் அடித்து வாயில் போட்டுக்கொள்வார்கள்போ லிருக் கிறது. "கொட்டினால்தான் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சிதான்.''

* * *

பெரிய பெரிய வேலைகளைச் செய்பவர்கள் எல்லாரும் பெரிய குடும்பங்களில் பிறந்தவர்களல்லர். சீமான் வீட்டில் பிறந்தவர்க ளல்லர். வித்வான் வீட்டில் பிறந்தவர்களல்லர். உயர்ந்த ஜாதியி

லேயே பிறந்தவர்களுமல்லர். ஆனால் எங்கு பிறந்தாலும் சக்தியுள்ள மக்களே மேலே வருகின்றனர். அவர்களுடைய ஜீவசக்தி—ஆத்மசக்தியிலேயே ரகஸ்யமும் உயர்வு மிருக்கின்றன. இந்த ரகசியத்தை அறிபவர் எத்தனைபேர்? பணக்காரர் தம்மாலேயே உலகம் நிற்கிறதென்கிறார். சிறிது கிராமம் பூமி யுடையவர் தாம் நினைப்பதையெல்லாம் முடித்துவிடலாமென்றெண்ணுகிறார். மற்றவர் தங்களுடைய அதிகாரத்தில்தான் யாவுங்கட்டுப்பட்டுக் கிடக்கின்றன வென்கிறார். ஆனால் எத்தனை வருஷமாக முயற்சி செய்து பாதுகாக்கப் பெற்றிருந்தாலும் எவ்வளவு பலமுடையதாயிருந்தாலும் எத்தனை சாமர்த்தியமாகச் செய்யப்பெற்றிருந்தாலும் அது சிலருடைய சிறு முயற்சியால் தோல்வியடைந்து அழிந்தொழிதலும் கூடும். காலக்கிரமத்தில் “சிறு உளியும் மலையைத் தொலைக்கும்.”

* * *

கெட்டிக்காரர் பயித்தியக்காரர் என்று இரண்டுவகை. இந்தப் பிரிவு பணக்காரரிலுமுண்டு ஏழையிலுமுண்டு. ஆனால் கெட்டிக்காரனை ஏவலாயன் தொடர்ந்து திரிவதுவழக்கம். அவர் வாய்திறந்தால் தனக்கு வைகுந்த பதவி சித்தித்துவிட்டதாக இந்தப் பயித்தியகார ஆசாமிகள் கருதிக்கொள்ளுகிறார்கள். இப்படிச் சில ஆசாமிகளை வைத்துக்கொண்டால்தான் கெட்டிக்காரர்களை மற்றவர்கள் மதிப்பார்கள்; சமயத்தில் ஏதாவது செலவு வந்தாலும் அல்லது அவமானம் வந்தாலும் இந்தப் பயித்தியக்காரன் தலையில் சுமத்தலாமல்லவா? அதற்காகத் தான் இந்த அசடுகளைக் கட்டிக்கொண்டு அவர்கள் அழுகிறார்கள். ரகஸ்யமில்லாமல் கெட்டிக்காரன் ஒரு காரியமும் செய்யமாட்டான்! “சோழியன் குடுமி சும்மா ஆடாது.”

சதுரங்கை யொலி.

ஹிந்துவானர்

திருச்சி "இந்தோ—ஐரோப்பிய வேர் ஹௌஸ்" கம்பெனியின் சொந்தக்காரரான ஸ்ரீமாந் கா. பா. சங்கரய்யர் எழெட்டு வருஷங்கட்கு முன்னர் கிறிஸ்தவராக்கப்பட்டார். கிறிஸ்தவராயிருந்துகொண்டே தாயுமானர் பட்டினத்தார் பாடல்கள், ஸ்ரீ பரமஹம்ஸரின் உபதேசங்கள், சுவாமி விவேகாநந்தரின் வாக்குகள், அரவிந்தரின் வியாசங்கள் முதலியவைகளைப் படித்ததன் பயனாக ஹிந்துமதத்தின் பெருமையை உணர்ந்து இப்போது ஹிந்துவாயினர். சிருங்கேரி ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும் அவரை ஹிந்துவாகஏற்றுக்கொள்ளலாமென்று அநுமதிகொடுத்திருக்கிறார்களென்று அறிந்து மகிழ்வெய்துகிறோம். அப்படியே ஸ்ரீமாந் சங்கரய்யர் பிராயச்சித்தஞ் செய்துகொண்டு ஹிந்துவாகி வைதிக முறையில் சிராத்தம் முதலியனவும் செய்திருக்கின்றனரென்று தெரிகிறது. நமது சமயத்தை உள்ளூர உணராமையால் பலர் அந்நியமதம் புகுந்து நிற்கின்றனர். அவர்களை மீண்டும் ஹிந்துவாக்குதல் கூடாதெனப் பலரும் கூறி நின்றனர்; இப்போது அந்தத் தடை ஒழிந்தது. இனி நமது சமயாபிமானிகள் சமயவளர்ச்சிக்குப் பெரு முயற்சி செய்வார்களாக.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

இப்பெயர்கொண்டு சென்னை மைலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து வெளிவரும் மாதப்பத்திரிகையின் தொகுதி ௨. பகுதி எ. வரப்பெற்றோம். இது ஹிந்து மதத்தின் பெருமையை உலகிற்கு உள்ளங்கை நெல்லிக்கனியென அநுபவ பூர்வமாக விளக்

கிய மெய்ஞ்ஞான தேசிகனும் ஸ்ரீ ராமஹம்ஸ தேவரது அமிர்த மொழிகளையும், அவரது சரித்திராம்ருதத்தையும், உலகின் நாற்றிசையிலும் வேதாந்த முழக்கஞ் செய்து வெற்றிபெற்ற தவராஜ சிம்ஹமாகிய சுவாமி விவேகாநந்தரது கம்பீரமான வாக்குகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூ ௩—௦—௦.

உண்மையான ஹிந்து அரசர்!

அமதாபாத்தைச் சேர்ந்த பாலிடாறு சமஸ்தான எல்லைக்குள் புனிதமான சிராவண (ஆவணி) மாதத்தில் எந்தப் பிராணிகளையும் கொலை செய்யக்கூடாதென அந்த சமஸ்தானாதிபதி ஒரு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்த சமஸ்தானாதிபதியே சரியான ஹிந்து என்று நாம் கூறுவோம். ஜனங்களுடைய வாழ்க்கைக்கும் பாப புண்யத்திற்கும் அரசனே பொறுப்பென்பதை யுணர்ந்து மக்கள் அறியாமையாற் செய்யும் பாவங்களை நீக்க முன் வந்தமைக்கு நாம் நன்றி கூறுகிறோம். இம்மாதிரியான அஹிம்ஸா தருமம் வருஷ முழுமையும் தேச முழுமையும் பரவி நிற்கும் நாளை யெதிர்பார்த்திருப்போம்.

சிறையில் மதபோதனை

விடுமுறை நாட்களிலும் ஹிந்து மகமதிய பண்டிகைகளின் போதும் பீஹார் சிறைகளிலுள்ள கைதிகளுக்கு மதபோதனை செய்வதற்காக மதப்பிரசாரகர்களைச் சிறைக்குள் அனுப்ப பீஹார் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர். முகமதியக் கைதிகட்கு "குர் ஆன்" வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டிருக்கிறது என்றறிகிறோம். சிறைச்சாலை யானது தவறி நடக்கும் மக்களைத் துன்புறுத்துவதற்காக ஏற்பட்டதன்று. உலக வாழ்வில் நீதி தவறுபவர்களை நல்வழிப்படுத்துதற்கே சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த எண்ணத்தைபே எண்ணாத அதிகாரி வர்க்கத்தினரே பல தேசங்களிலும் மிகுந்து நிற்கின்றனர். அமெரிக்காவில் சிறைச்சாலை சீர்திருத்தச்சாலை யென்று வழங்கப்படுகிறதாம். அம்மாதிரி மக்களைத் திருத்துவதால் தேசத்தில் பல நலங்கள் விளையும். இதற்குச் சிறைச்சாலைகளில் மதப்பிரசாரம் மிக அவசியமானதென்பதை ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தாரும் சிந்தித்தல் வேண்டும். இப்போது பீஹார் அரசாங்கம் இதற்கு முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

கள்ளுக்கும் காப்பிக்கும் நடந்த கடிதப்போக்கு வரவு.

(குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc எழுதியது.)

கள்ளப்பதேவர்	ஓம்	Tel:சொல்விளம்பி
தென்னைமரத்தூர்	ஸ்வாஹா:	காம்ப். பீப்பாய்க்குடி.
		அ-ஆடி-விகாரி-கலி.

கனந்தங்கிய காப்பியாரே!

இவடம் க்ஷேமத்தைப்பற்றிச் சொல்லவேண்டியது இல்லை. அவடம் க்ஷாமத்துக்கு அவசியம் எழுதியனுப்பி வைக்கவேண்டியது.

நான் இப்பொழுது பீப்பாய்க்குடியில் காம்ப் போட்டிருக்கிறேன். நாளை போத்தலூர் போவேன். பிறகு தொண்டைநாட்டிற்குச் சென்று, கண்டவாராயன்பட்டி சிறுகுடற்பட்டி, கும்பங்குடி முதலிய இடங்களுக்குச் செல்ல உத்தேசித்திருக்கிறேன். இப்பொழுது என் வயிறு மிகுதியும் அடிபட்டு உதைபட்டுக் கலங்கிக்கிடக்கிறபடியால் எனக்கு இன்னதை எழுதுகிறதென்று தோன்றவில்லை. நிரம்ப எழுதவேண்டும் என்று நினைத்திருந்தேன். படிக்குப்பாதி மறந்துபோய்விட்டது. மறந்துபோனவைகளை மறு கடிதத்தில் எழுதுகிறேன். ஒரு வருஷகாலமாக என்னை ஒருவரும் தேடவில்லை. நாடாரும் நாடாரேயாயினர். ஒரு மஹாத்மா, "குடியே கூடாது; குடி குடியைக் கெடுத்துவிடும்" என்று சொல்லி, உத்தரவு போட்டிருக்கிறாராம். ஆதலால்இப்பொழுது என்பக்கத்தில் ஒருவரும் நாடுகிறதில்லை. எனக்கு இப்பொழுது முழுமூஜாத்தான். நாம் இருவரும் சந்தித்து வெகு நாளானபடியால், என்னைக்கண்டு பேசுகிறதற்குக் காலிச் சூதுக்கூடத்திற்குக் கூடிய சீக்கிரத்தில்வரவும். ஏனென்றால் நான் இப்பொது, "மறுபிறப்பில் இளநீராயும் தேங்காயாயும் பிறக்கவேண்டும்" என்று சுவாமியைக் குறித்துத் தவம் பண்ணப்புறப்படப்போகிறேன். ஆதலால் இம்முறை நீங்கள் வரத்தவறினால் பிறகு உங்களைச் சந்திக்கமுடியாது.

உங்களைப்பற்றிக் கொஞ்சம் என் காதுக்கு எட்டியிருக்கிறது. உங்களையும் தள்ளிவைக்கப்போகிறதாக ஒரு வதந்தி உலாவுகிறது! உங்களுக்குப் பதிலாக நீர்மோர் நீராகாரம் நன்னாரிவேர்ச்சாரம் ஆவாரம்பூச்சாரம் கொத்தமல்லித் தண்ணீர் கோதுமைச்சாரம் முதலிய புதுக்காப்பிகள் வந்து இறங்கி இருக்கின்றனவாமே! நாம் இரண்டுபேரும் அண்ணன் தம்பிகளாகப் பல இடங்களிலும் முன்னே அமர்ந்திருந்தோம். ஆனால் இப்பொழுது இரண்டு பேரையும் ஏழரை நாட்டான் தொடர்ந்திருக்கிறான். ஆதலால் இனிமேல் இங்கே நம்முடைய சம்பம் பலிக்காது. நீங்களும் என்னோடு தவசுக்கு வந்து, மறுபிறப்பில் காப்பிச்செடியாய்ப் பிறக்காமல், நன்னாரிக் கொடியாய் முளைக்கும்படி வரம் வாங்கிக்கொள்ளலாம். உடனே பதில் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு எழுதுகிறகடிதத்தில் தலை ஒட்டாவிட்டாலும்குற்றமில்லை. ஏனென்றால் தபாலாபீசு ஐயா எனக்கு நிரம்பத் தெரிந்தவர்.

இங்ஙனம், தங்களன்புள்ள கள்ளப்பதேவர்

எனது விலாசம்:—திருவாளர். தெ. பீ. க. கள்ளப்பதேவர்

ஒண்ணு நம்பர் கள்ளுக்கடைத் தெரு

தென்னமரத்தூர். ஈச்சமரத்தூர் போஸ்ட்

பனங்காட்டூர் மார்க்கம், பனங்குடி ஜில்லா.

பதில்.

நீ. கா. கொ.
காப்பியாச்சாரியார் W.B.T.O.
ஸ்ரீமான்பட்டணம்.

தந்தி அட்ரஸ்:Coffee.
காம்ப் தேத்தலூர்.
கறு-ஆடி-விகாரி-கலி.

அன்புள்ள தமையனே!

நீங்கள் எழுதியிருக்கிறபடி எல்லாம் க்ஷேமந்தான். என்பாடும் திண்டாட்டந்தான். இப்பொழுது நம்முடைய செல்வாக்கு அடியோடு தொலைந்து விட்டது! நம்மை இப்பொழுது தீண்டுவார் ஒருவருமிலர். முன்னே நாம் வக்கீல்மார்களோடும் பிரபுக்களோடும் உத்யோகஸ்தர்களோடும் பள்ளிக்கூடத்துப் பையன்களோடும் பழகியிருந்தோம். ஆடவர் பெண்டிர் இருபாலாரும் நம்மோடு அகமகிழ்ந்து கூடிக்குலாவிக் கொண்டிருந்தார்கள் மடாதிபதிகள் எல்லாரும் நம்மை மகிழ்ந்து வரவேற்றார்கள். இவ்வாறு நாம் விசிட்டுக்குமேற் பாவி எல்லாராலும் கௌரவிக்கப்பட்டிருந்தபடியாலும் பால்குடிமாறாத பச்சைப்பிள்ளைகள் குடலிலெல்லாம் புகுந்து வேலைசெய்ய ஆரம்பித்தபடியாலும், மற்றும் கருத்தாங்கியுள்ள கர்ப்பஸ்திரீகள் வயிற்றையெல்லாம் குடைய ஆரம்பித்தபடியாலும் நமக்கு இப்பொழுது இத்தகைய பெரிய ஆபத்து வந்திருக்கிறது. எல்லோரும் ஏகமனதாக நமக்கு உலை வைக்கிறதற்காகப் பிரசாரஞ்செய்து கொண்டுவருகிறார்கள். ஆனால் உங்களுக்கு வந்திருக்கிறமாதிரி அவ்வளவு அதிகமான கஷ்டம் எனக்கு இன்னும் வந்துவிடவில்லை. ஏனென்றால் மேனாட்டுத் துரைமார்களும் கீழ்நாட்டுக் கருந்துரைகளும் என்னைச் செத்தாலும் எலும்பு எலும்பாய்க் கழிந்திட்டாலும் விடமாட்டார்கள் என்று நம்ப இடமிருக்கிறது. உங்களை எல்லோரும் அடித்தடித்துத் துரத்துகிறபடியால் அடிக்கடி காம்ப் மாற்றுகிறீர்கள் போலும்! நீங்கள் சொல்வதுபோல் நாம் வனவாசம் போவது நல்லதுதான் இக்கத்துரைகள் ஆதரித்தாலும் எத்தனைநாளோ? இனிபிறக்கிற பிள்ளைகள் ஆதரிக்கமாட்டார்கள். ஆனாலும் நீங்கள் இவ்வளவு அவசரப் படவேண்டாம். இங்கே, சன்னாங்குடியில் இருக்கும் கருந்துரை யவர்கள் எனக்கு ஒருதந்தி அனுப்பி யிருக்கிறார்கள். உங்களுக்கும் அங்கே ஒருபொசிஷன் கிடைக்கும் என்று எண்ணுகிறேன் மற்றவைநேரில்.

இங்ஙனம் தங்களன்புள்ள,
காப்பியாச்சாரியார், W.B.T.O.

எனது விலாசம்—

மகா-ள-ள-ஸ்ரீ மகாகனம்பொருந்திய
நீலகிரி, கா. கொ. காப்பியாச்சாரியார், W.B.T.O.
கொட்டையூர், கொண்டி ஐயர் காபிகிளப்.
சடாமுனிபொந்து, காப்பிக்குடி.
தேயூர்போஸ்ட், கொக்கோ மார்க்கம்.

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று
சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றது.